In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi

S.C.No.250/2022

Deposition of P.W.3

| | |
|---|---|
| Name | திருமதி.சேர்மகனி |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 11th day of December 2024.

(1 வது எதிரி ஆஜர் செய்யப்பட்டார்.2 வது எதிரி ஆஜர்.3 வது எதிரி ஆஜர் இல்லை.3 வது எதிரியின் வருகையின்மையை மன்னிக்க பிரிவு 355 பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை** :

நான் மருதன்வாழ்வு மேலகாலனியில் வசித்து வருகிறேன். இறந்த மீனாட்சியை எனக்கு தெரியும். எதிரிகள் மூவரையும் எனக்கு தெரியும். 01.07.2022 ம் தேதி முற்பகல் 11.30 மணியளவில் நான் என்னுடைய ஆட்டுகொட்டகையை சுத்தம் செய்து கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் மூவரும்சாட்சி அழகர்சாமியின் வீட்டில் இருந்து வெளியே வந்ததை பார்த்தேன். நான் அவர்கள் மூவரிடமும் என்னவென்று கேட்டேன். அழகர்சாமியின் வீட்டிற்கு சென்று ரீசார்ஜ் செய்துவிட்டு வருவதாக மூவரும் என்னிடம் சொன்னார்கள். அன்று இரவு மீனாட்சி இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். பின்னர் மீனாட்சியை எதிரிகள் கொன்றுவிட்டதாக தெரிந்து கொண்டேன்.( மீனாட்சியின் இறப்பு குறித்து கேள்விப்பட்டு தெரிந்து கொண்டதாக சாட்சி சொல்லும் இந்த சங்கதியை

பொருத்து தங்களது ஆட்சேபனையை பதிவு செய்யும்படி 1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் பிரதிநிதித்துவம் செய்தனர். மேற்படி ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சாட்சி அழகர்சாமியின் வீடு அமைந்துள்ள பகுதியில் என்னுடைய வீடு இல்லை என்று சொன்னால் சரிதான். அவரது வீட்டருகே என்னுடைய ஆட்டு தொழுவம் உள்ளது. என்னுடைய தொழுவத்தின் வாசல் கிழக்கு பார்த்து உள்ளது. என்னுடைய தொழுவத்தின் வாசல் வடக்கு பார்த்து இல்லை. எனக்கு அழகர்சாமியின் வீட்டருகே ஆட்டுதொழுவம் இல்லை என்று சொன்னால் தவறு. 01.07.2022 ம் தேதி முற்பகல் 11.30 மணியளவில் 1 முதல் 3 எதிரிகளை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் தவறு. போலீசார் கேட்டுக்கொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் தவறு.

**2 வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

( 1 மற்றும் 3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையை 2 வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி குறிப்பாணை பதிவு செய்யப்பட்டது)

**மறுவிசாரணை :**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரிகள் / எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

MADHAVA RAMANUJAM S

Digitally signed by MADHAVA RAMANUJAM S
Date: 2024.12.11 17:34:02 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.

தட்டச்சு செய்தவர் – சு.கோமதி.